


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்





Vol: 03 | Issue: 103 | 4 Pages | 12.11.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 03 | இதழ்: 103 | 4 பக்கங்கள் | 12.11.2025 | புதன்கிழமை | விலை ரூ. 6 | வருட சந்தா ரூ.1825



**இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே**
**கெடுக்குந் தகைமை யவர்**

**விளக்கம்:**
கடிந்து அறிவுரைக் கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரை கெடுக்கும் ஆற்றல் உள்ளவர் எவர் இருக்கின்றனர்.

## வாக்குப்பதிவில் புதிய சாதனை படைக்க வேண்டும்: பிரதமர் மோடி வேண்டுகோள்



புதுடெல்லி, நவ.12

பீகார் சட்டசபை தேர்தல் 2 கட்டங்களாக நடக்கிறது. 243 சட்டசபை தொகுதிகள் உள்ள நிலையில், முதல் கட்டமாக 121 தொகுதிகளில் கடந்த 6ந் தேதி முதல்கட்ட வாக்குப்பதிவு நடந்தது. இதுவரை இல்லாத அளவாக 65.08 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்நிலையில், மீதி உள்ள 122 சட்டசபை தொகுதிகளில் இன்று (செவ்வாய்க்கிழமை) இறுதிக்கட்ட வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. 20 மாவட்டங்களில் அடங்கி உள்ள இத்தொகுதிகளில் 1,302 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். காலையில் இருந்தே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர்.

இந்தநிலையில், பீகார்சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவில் புதியசாதனை படைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"பீகார்சட்டசபை தேர்தலுக்கான இறுதி கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வருகிறது. அனைத்து வாக்காளர்களும் ஆர்வத்துடன் பங்கேற்று வாக்குப்பதிவில் புதிய சாதனையைப் படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக முதல் முறையாக வாக்களிக்கும் இளம் வாக்காளர்கள், தாங்கள் வாக்களிப்பது மட்டுமல்லாமல், மற்றவர்களையும் வாக்களிக்க ஊக்குவிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## கணவனை கொன்று உடலை சூட்கேசில் அடைத்த பெண் அதிர்ச்சி சம்பவம்




ராய்ப்பூர், நவ.12

சத்தீஷ்கார் மாநிலம்ஜாஸ்பூர்மாவட்டம் கொர்பா கிராமத்தை சேர்ந்தவர் சந்தோஷ் (வயது 43). இவருக்கு திருமணமாகி லதா என்ற மனைவியும் 3 பிள்ளைகளும் உள்ளனர். பிள்ளைகள் 3 பேருக்கும் திருமணமாகி வேறு கிராமங்களில் வசித்து வருகின்றனர்.

இதனிடையே, சந்தோசுக்கும் அவரது மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாக அவ்வப்போது வாக்குவாதம் , சண்டை ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சந்தோசுக்கும், லதாவுக்கும் இடையே மீதும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் வீட்டில் இருந்த கத்தியால் சந்தோசை லதா குத்திக்கொன்றார். பின்னர், அவரது உடலை சூட்கேசில் அடைத்துள்ளார். பின்னர், மூத்த மகளை செல்போனில் தொடர்புகொண்ட லதா தனது கணவர் சந்தோசை கொலை செய்துவிட்டதாக கூறினார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த மூத்த மகள் உடனடியாக கொர்பா கிராமத்திற்கு சென்றுள்ளார். மேலும், இதுகுறித்து போலீசாருக்கும் தகவல் கொடுத்துள்ளார்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், சூட்கேசில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சந்தோசின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், கணவனை கொன்றுவிட்டு தலைமறைவான லதாவை தீவிரமாக தேடி வருகின்றனர். கொலைக்கான காரணம் குறித்தும் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காட்டில் விறகு சேகரிக்க சென்ற முதியவரை அடித்துக்கொன்ற புலி அதிர்ச்சி சம்பவம்



மும்பை, நவ.12

மராட்டிய மாநிலம் சந்திரபூர் மாவட்டம் மந்தஹி கிராமத்தை சேர்ந்த முதியவர் பாஸ்கர் (வயது 55). இவர்நேற்று முன் தினம் மாலை கிராமத்திற்கு அருகே உள்ள காட்டில் விறகு சேகரிக்க சென்றுள்ளார்.

இந்நிலையில், பாஸ்கர் விறகு சேகரித்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த புலி அவரை அடித்துக்கொன்றது. விறகு சேகரிக்க சென்ற பாஸ்கர் வெகுநேரமாகியும் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த அவரது குடும்பத்தினர் இது குறித்து போலீசில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், வனத்துறையினர் உதவியுடன் காட்டின் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது, வனப்பகுதியில் புலி அடித்துக்கொன்ற நிலையில் பாஸ்கரின் உடலை வனத்துறையினர் கண்டுபிடித்தனர். . உடல் பாகங்கள் சிலவற்றை புலி சாப்பிட்டுள்ளது. இதையடுத்து பாஸ்கரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்குஅனுப்பிவைத்தனர். இந்தசம்பவம்தொடர்பாகபோலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழக மக்களுக்கான திட்டங்களை தடுக்கிறது திமுக - நிர்மலா சீதாராமன் குற்றச்சாட்டு

திமுக அரசு ஒவ்வொரு விஷயத்திலும் எதிர்ப்பு தெரிவித்து வருவதன் மூலம் தமிழக மக்களுக்கான திட்டங்களை தடுக்கிறது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றம்சாட்டியுள்ளார்.

கோவை முதலிப்பாளையம் பகுதியில் உள்ள எம்.என்.சி.ஆர் மண்டபத்தில் பாரதிய ஜனதா கட்சியின் கோவை கோட்ட அணி பிரிவுகள், மாநிலம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். மேலும், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தேசிய மகளிர் அணி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். கோயம்புத்தூர் கோட்டத்திற்குட்பட்ட கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை நகர் மற்றும் நீலகிரி கோட்டங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "



பாஜக அரசின் திட்டங்கள் விவசாயிகள் இளைஞர்கள் ஏழை எளிய மக்கள் மகளிர் மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டது. குறிப்பாக மகளிர் முன்னிறுத்தி திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு உதாரணம் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் முதல் மசோதாவாக 33 சதவீத இட ஒதுக்கீட்டை முதல் சட்டமாக புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் இயற்றினோம். மத்திய அரசு தமிழகத்திற்கு சரியான நிதி பங்கீடு கொடுக்கவில்லை என பொய்யான பிரச்சாரத்தை முதல்வர் பரப்புகிறார். மாநில திமுக அரசு வரி செலுத்தும் கோயம்புத்தூர் மக்களுக்கு மட்டுமே அனைத்து திட்டங்களையும் வழங்குவோம் என்றால் சரியா.. அரியலூர் போன்ற மாவட்டங்கள் என்ன ஆகும் என கேள்வி எழுப்பினார்.

அதுமட்டும் இல்லாமல் தமிழக மக்களுக்கு நன்மை கிடைத்து விடக்கூடாது என்பதற்காக மோடிக்கு எதிராக திமுக அரசு மத்திய அரசின் திட்டங்களுக்கு எதிராக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியும், நீதிமன்றங்களை நாடியும் முட்டுக்கட்டை போடுவதாக குற்றம் சாட்டினார்.

கேரளாவில் உள்ள கம்யூனிஸ்ட் அரசு, பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் வேண்டும் என கேட்கின்றனர். ஆனால் தமிழகத்தில் எதிர்க்கின்றனர். நீட் வந்த காலத்தில் இருந்து எதிர்க்கிறார்கள். ஆனால் நீட்டால் ஏழை கிராமப்புற மாணவர்கள் பயன் பெறுகின்றனர். இவர்கள் சொந்தக்காரர்கள் மூலம் கல்லூரி நடத்தி பணம் சம்பாதித்து வந்ததை மாற்றியுள்ளோம் என்றார்.

மேலும் திமுகவுடன் கூட்டணி இல்லை என்றால் ஒரு இடம் கூட வெற்றி பெற முடியாத கட்சியாக காங்கிரஸ் இருக்கிறது. தேசியத்தையும் ஆன்மீகத்தையும் மனதில் வைத்து நடக்கும் கட்சி பாஜக மட்டும் தான். எஸ்.ஐ.ஆர் திட்டத்தால் சீர்திருத்தம் வருவதை கண்டு ஏன் திமுகவிற்கு பயம், கலக்கம் ஏற்படுகின்றது. பல விஷயங்களில் அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பது அவர்களது பலவீனத்தை காட்டுகிறது என்றார் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

## தாராபுரத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் — 700க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில், இந்திய தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள ★"சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி" (Special Intensive Revision SIR)★ யை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திமுக கிழக்கு மாவட்டம் சார்பில், மாவட்ட பொறுப்பாளர் இ.ல. பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. நகர்மன்ற தலைவர் பாப்பு கண்ணன் மற்றும் நகரச் செயலாளர் முருகானந்தம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். தாராபுரம் பழைய நகராட்சி அலுவலகம் எதிரே, சர்ச் வீதியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், 700க்கும் மேற்பட்டோர் உற்சாகமாக பங்கேற்றனர். திமுக சார்பில், இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் இந்த "SIR" நடவடிக்கை, அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டதுடன், லட்சக்கணக்கான உண்மையான வாக்காளர்களின் பெயர்களை பட்டியலிலிருந்து நீக்க வழிவகுக்கும் எனவும், இதனால் சிறுபான்மையினர் மற்றும் பட்டியல் சமூக மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

திமுக ஏற்கனவே இந்த 'SIR' நடைமுறைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்தமனுமீதான விசாரணை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ள காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சிகள்ஆகியவற்றின்நிர்வாகிகளும் செயற்பாட்டாளர்களும் பங்கேற்றனர். தாராபுரம் முழுவதும் இந்த ஆர்ப்பாட்டம் பெரும் கவனத்தை ஈர்த்தது. போலீஸ் பாதுகாப்பு வலுவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## சாலைப்பணியாளர் முதுநிலைப் பட்டியல் கோரிக்கை - தாராபுரத்தில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பராமரிப்பு ஊழியர்கள் சங்கம் சார்பில் கோட்ட அளவிலான கோரிக்கை கூட்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் அரசு விதிமுறைகளையும் உத்தரவுகளையும் பின்பற்றாமல், சாலைப்பணியாளர்கள் பயிற்சிப் பணியில் சேர்ந்த தேதியை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட முதுநிலைப் பட்டியல் தவறானது என்பதைக் கூறி, அதனை ரத்து செய்ய வேண்டும் என ஊழியர்கள் வலியுறுத்தினர்.

மேலும், பணியாளர்கள் உண்மையில் பணி வரைமுறை செய்யப்பட்ட நாளையே அடிப்படையாகக் கொண்டு புதிய முதுநிலைப் பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

தாராபுரத்தில் மட்டும் கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்ததை வைத்து பதவி உயர்வு வழங்கி வருகின்றனர் இதில் அரசியலில் தலையீடுகளும் மற்றும் அதிகாரிகள் கையூட்டு பெற்றுக் கொண்டும் இதனை செய்து வருகின்றனர் இதனை உயர் அதிகாரிகள் கண்டும் காணாமலும் இருக்கின்றனர் இதற்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கூட்டத்தில் கோட்டத் தலைவர் ஜே.எல். பீட்டர் தலைமையேற்று நடத்தினார். கோட்டச்செயலாளர் கே. செந்தில்குமார் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

வாழ்த்துரையாக வட்டக்கிளைச் செயலாளர் பி. ராஜு (ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம்), எஸ். நவீன் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம்), மாநில தணிக்கையாளர் சி. பாலராஜசேகர் (பொது நூலகத் துறை அலுவலர்கள் சங்கம்), வட்டாரத் தலைவர் எம். பெரியசாமி (ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம்), மாவட்டச் செயலாளர் கே. தமயந்தி (கிராம சுகாதார செவிலியர் சங்கம்) ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்புரையாக மாநில துணைத்தலைவர் பி. செந்தில்குமார் மற்றும் மாநில பொருளாளர் என். ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் பேசினர். சாலைப்பணியாளர்களின் பணிநிலை, பாதுகாப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைப் பிரச்சனைகள் குறித்து விரிவாக விளக்கினர். அவர்கள், "சாலைப்பணியாளர்களின் நீண்டகால சேவை மற்றும் நலன்கள் அரசால் மதிக்கப்பட வேண்டும். அவர்களின் பணியிடப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்," என வலியுறுத்தினர்.

நிறைவுரையில் மாநில தலைவர் எஸ். ரமேஷ் பேசினார். அவர், "சாலைப்பணியாளர்கள் தினமும் மக்களின் உயிரைக் காப்பாற்றும் பணியை செய்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்," என்றார்.

நன்றியுரையை கோட்டப் பொருளாளர் சி. ஜெகதீஸ் வழங்கினார்.

கூட்டத்தில் பல் வேறு துறைகளிலிருந்து நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்று, சாலைப் பணியாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தனர்



# டிஜிட்டல் கைது செய்ததாக மிரட்டி தம்பதி வீட்டுக்குள் சிறைவைப்பு: கோவையில் பரபரப்பு சம்பவம்

கோவை, நவ.12

கோவை ராமநாதபுரத்தை சேர்ந்த 65 வயது முதியவர், தனது மனைவியுடன் வசித்து வருகிறார். சம்பவத்தன்று முதியவரின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. மறுமுனையில் பேசிய நபர், தான் மும்பையில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தில் இருந்து பேசுவதாக கூறினார். தொடர்ந்து அந்த நபர், உங்கள் ஆதார் எண்ணை வைத்து வங்கி கணக்கை சோதனை செய்ததில், பயங்கரவாதிகளுக்கு பலமுறை பணம் அனுப்பியுள்ளது தெரியவந்துள்ளது.

இதனால் உங்களுக்கு பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டு உள்ளது. நாங்கள் உங்கள் வங்கி கணக்கை ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். சிறிது நேரத்தில் போலீஸ் அதிகாரி போன்று சீருடை அணிந்து வீடியோ காலில் பேசிய நபர், பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருப்பதால் உங்களையும், உங்கள் மனைவியையும் டிஜிட்டல் கைது செய்து உள்ளோம். வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது என்று கூறினார்.

மேலும் வீட்டின் வெளியே துப்பாக்கிகளுடன் போலீசார் கண்காணித்துக்கொண்டு இருக்கிறார்கள். வீட்டைவிட்டு வெளியே வந்தால் சுட்டு விடுவார்கள். உங்கள் வங்கி கணக்கில் உள்ள ரூ.18 லட்சத்தை நாங்கள் சொல்லும் வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டும். உங்கள் வங்கி கணக்கை முழுமையாக சோதனை செய்த பின்னர் அந்த பணத்தை மீண்டும் உங்கள் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துவிடுவோம் என்று கூறினார்.

மேலும் பணத்தை அனுப்பும் வரை வீடியோ கால் இணைப்பை துண்டிக்கக்கூடாது என்று மிரட்டியதாக தெரிகிறது. இதனால் பயந்துபோன முதியவர், தனது மனைவியுடன் வீட்டிற்குள்ளேயே முடங்கினார். இதற்கிடையில் வீடியோ காலில் போலீஸ் அதிகாரிகள் என்று கூறி அவ்வபோது சிலர் பேசினர். அவர்கள் உடனடியாக நாங்கள் கூறிய வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்புமாறு மிரட்டிக்கொண்டே இருந்தனர். குறிப்பாக வீட்டுக்குள்



உள்ள கழிவறைக்குக்கூட போக விடவில்லை என்று கூறப்படுகிறது.

மிகுந்த அச்சத்தில் இருந்த தம்பதி இரவு முழுவதும் தூங்காமலும், வெளியே செல்லாமலும் வீட்டுக்குள்ளேயே தவித்தனர். ஆனால் அவர்கள் மோசடி நபர்கள் கூறிய வங்கிகணக்கிற்குபணத்தை மட்டும் அனுப்பி வைக்கவில்லை. இந்த நிலையில் 2 நாட்கள் வயதான தம்பதி வீட்டைவிட்டு வெளியே வராததால் சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் ராமநாதபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

பின்னர் முதியவர் வீட்டின் கதவை தட்டினர். அப்போது கதவை திறந்த முதியவர்தங்களைமும்பை போலீசார் டிஜிட்டல் கைது செய்திருப்பதாகவும், வெளியே வந்தால் சுட்டு விடுவதாகவும் கூறியுள்ளனர் என்று தெரிவித்தார். இதனால் அதிர்ச்சியடைந்த போலீசார் அப்படி யாரும் டிஜிட்டல் கைது செய்ய முடியாது. வெளியே துப்பாக்கியுடன்போலீசார்யாரும் இல்லை என்று கூறி அவர்களை சமாதானப்படுத்தி மீட்டு வெளியே அழைத்து வந்தனர்.

அதன்பின்னர் முதியவரை போலீஸ் நிலையம் அழைத்து சென்று விசாரித்தனர். மேலும் மாநகர சைபர் கிரைம் போலீசாரும் முதியவரிடம் விசாரணைநடத்தினர். அப்போது அவர்கள் டிஜிட்டல் கைது என்று ஒன்று கிடையவே கிடையாது. மோசடி கும்பல் இதுபோன்று ஏமாற்றி பணம் மோசடி செய்ய முயன்றிருக்கலாம் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து முதியவர் நிம்மதி அடைந்தார். மோசடி கும்பல் கூறிய வங்கிகணக்கிற்குபணத்தை அனுப்பாததால் முதியவரிடம் இருந்த ரூ.18 லட்சம் தப்பியது.

இந்த சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அரியலூரில் பயங்கரம்: லாரி விபத்தில் சிக்கியதில் வெடித்து சிதறிய சிலிண்டர்கள்



அரியலூர், நவ.12

அரியலூர் வாரணவாசியில் சிலிண்டர்கள் ஏற்றி வரப்பட்ட லாரி விபத்தில் சிக்கியதில் பலத்த சத்தத்துடன் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு ஏற்பட்டது. முன்னதாக வளைவில் திரும்பும்போது லாரி விபத்தில் சிக்கியதாக கூறப்படுகிறது. சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் தீயை கட்டுப்படுத்துவதில் சிரமம் நிலவியது. இந்த சூழலில் சாலையை முற்றிலுமாக மூடி வாகனங்கள் வேறு சாலைக்கு மாற்றி விடப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. லாரி முற்றிலும் எரிந்து நாசமான நிலையில், ஓட்டுநர் நிலை குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

# டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு 10 ரூபாய் அதிகம் வசூல்: இழப்பீடு வழங்க நுகர்வோர் தீர்ப்பாயம் உத்தரவு

சென்னை செம்பியம் பகுதியை சேர்ந்த தேவராஜன் என்பவர், டாஸ்மாக் கடையில் 240 ரூபாய் மதிப்புள்ள மதுபானத்தை கடந்த மார்ச் மாதம் வாங்கியுள்ளார் கடை விற்பனையாளர் 250 ரூபாய் வசூலித்துள்ளார் .

பாட்டிலில் 240 ரூபாய் தான் போட்டிருக்கிறது என விற்பனையாளரிடம் முறையிட்டுள்ளார். ஆனால் அவர் எந்தவொரு பதிலைஇது வாடிக்கையாளருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் தன்னிடம் கூடுதலாக வசூலித்த 10 ரூபாயை திரும்பி வழங்கிட உத்தரவிடக்கோரியும், தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு இழப்பீடாக



ஒரு லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிடக்கோரியும் நுகர்வோர் தீர்ப்பாயத்தில் முறையீடு செய்துள்ளார்

அந்த கடைவிற்பனையாளர் தேவராஜனுக்கு 5 ஆயிரம் ரூபாயை இரண்டு மாதத்தில் வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இரண்டு மாதத்திற்குள் வழங்காவிடில் ஆண்டிற்கு 9 சதவீதம் வட்டியுடன் வழங்க உத்தரவிட்டுள்ளது .

# தேனி: பைக் சக்கரத்தில் துணி சிக்கி பெண் பலி

பெரியகுளத்தில் இருந்து தேனி நோக்கி இளைஞர் ஒருவர் இன்று அவரது பைக்கில் அவரது தாயாரை அமர வைத்து சென்று கொண்டிருந்துள்ளார்.

லட்சுமிபுரம் அருகே பைக் சென்று கொண்டிருந்த பொழுது பின்னால் அமர்ந்திருந்த தாயாரின் துணி, பைக் சக்கரத்தில் சிக்கி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் பின்னால் அமர்ந்திருந்த பெண் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயேபலியானார். விபத்து குறித்து தென்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. தென்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்றது.




மதுரை விமான நிலையத்திற்கு 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பு டெல்லி செங்கோட்டைஅருகேகார்வெடிப்புசம்பவத்தையடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# டெல்லி சம்பவம்: மோடிஅமித்ஷாஅம்பானி கூட்டணி தானே இதற்கு பொறுப்பேற்கவேண்டும்? திருமாவளவன் கேள்வி

சென்னை, நவ.12

வி.சி.க. தலைவர் திருமாவளவன் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டு வெடித்து பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியிருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. இருபதுக்கும் மேற்பட்டோர் படுகாய முற்று சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

நாட்டின் தலைநகரிலேயே, அதுவும் அதிஉயர் பாதுகாப்பு வளையத்துக்குட்பட்ட பகுதியிலேயே காரில் வெடிமருந்தை நிரப்பிக்கொண்டு எப்படி ஊடுருவமுடிந்தது?

உள்துறை மற்றும் உளவுத்துறை ஆகியவற்றைத்தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள 'மோடிஅமித்ஷாஅம்பானி' கூட்டணி தானே இதற்கு பொறுப்பேற்க வேண்டும்?

பீகார் சட்டமன்றப் பொதுத்தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவுக்கு முதல் நாளில் இப்படி நடந்திருப்பதால் இதனை அத்தேர்லோடு



முடிச்சுப்போட்டுப் பார்க்கும் நிலை உருவாகிறது. ஏற்கனவே இப்படிப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள் தேர்தல் காலங்களில் நடந்தேறி உள்ளன.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு விசிகசார்பில் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். பொதுமக்களுக்கு எதிரான இத்தகைய கொடூரப் போக்குகளை விசிக மிக வன்மையாகக் கண்டிக்கிறது. குற்றவாளிகள் ஒருவரும் தப்பிவிடக் கூடாது. அனவரையும் கைதுசெய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை, தெலுங்கானாவில் மாயமான சிறுமிகள் கன்னியாகுமரியில் மீட்பு



கன்னியாகுமரி, நவ.12

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் குமரி மாவட்ட சூப்பிரண்டு ஸ்டாலின், கடந்த ஏப்ரல் மாதம் சுற்றுலா போலீஸ் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த போலீசார் கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் தீவிரரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி நேற்று காலை சுற்றுலா போலீஸ் குழுவினர் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, கன்னியாகுமரி கடற்கரை அருகே 2 சிறுமிகள் தனியாக சுற்றித் திரிவதை போலீசார் கவனித்தனர்.

உடனே அவர்களை அழைத்து விசாரணை நடத்தினர். அதில் 15 வயது சிறுமி ஒருவர் சென்னையைச் சேர்ந்தவர் என்றும், கடந்த செப்டம்பர் மாதம் தனது வீட்டிலிருந்து வெளியேறியதாகவும், இதுகுறித்து சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது. அதேபோல் மற்றொரு 18 வயது சிறுமி தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்தவர் என்பதும் விசாரணையில் உறுதி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து 2 பேரையும் பாதுகாப்பாக போலீஸ் நிலையம் அழைத்துச் சென்று குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

சிறுமிகளை பாதுகாப்பாக மீட்டு, அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்த சுற்றுலா போலீசாரை மாவட்ட சூப்பிரண்டு ஸ்டாலின் பாராட்டினார்.

# கிருஷ்ணகிரி நகராட்சி தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றம்

கிருஷ்ணகிரி, நவ.12

கிருஷ்ணகிரி நகராட்சி 33 வார்டுகளை கொண்டது. இதில் தி.மு.க. கவுன்சிலர்கள் 22 பேரும், அ.தி.மு.க. கவுன்சிலர்கள் 5 பேரும், காங்கிரஸ், பா.ஜனதாகவுன்சிலர்கள் தலா ஒருவரும், தி.மு.க. ஆதரவு சுயேச்சை கவுன்சிலர்கள் 4 பேரும் என மொத்தம் 33 பேர் உள்ளனர்.

நகராட்சி தலைவராக தி.மு.க.வை சேர்ந்த பரிதா நவாப்பும், துணைத்தலைவராக சாவித்திரி கடலரசு மூர்த்தியும் இருந்து வருகிறார்கள். கடந்த மாதம் 16ந்தேதி தி.மு.க. மற்றும் தி.மு.க. ஆதரவு சுயேச்சை கவுன்சிலர்கள் என மொத்தம் 23 பேர் தலைவரின் செயல்பாடுகள் நகராட்சிக்கும், அரசுக்கும் எதிராக உள்ளது என பல்வேறு புகார்களை நகராட்சி ஆணையாளர் சதீஷ் குமாரிடம் வழங்கினார்கள்.

இதையடுத்து நேற்று காலை 11 மணி அளவில் நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பு



நடந்தது. ஆணையாளர் சதீஷ்குமார் வாக்குகளை எண்ணி முடிவுகளை அறிவித்தார். அதன்படி தலைவர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக 27 கவுன்சிலர்கள் வாக்களித்தனர்.

இதையடுத்து தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறியது. இந்த தீர்மானம் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து புதிய தலைவர் தேர்வு நடைபெறும் நாள் குறித்து அரசு முறையாக அறிவிப்பு வெளியிடும் என தெரிவித்தனர்.

# வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை திரும்ப பெறக்கோரி தி.மு.க. கூட்டணி ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ.12

தமிழகத்தில் அடுத்த ஆண்டு (2026) நடைபெற உள்ளசட்டமன்றதேர்தலை முன்னிட்டு எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் பட்டியல்தீவிரதிருத்தபணியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. எனவே தேர்தல் ஆணையத்துக்கு இந்த நடவடிக்கைக்கு எதிராக சுப்ரீம்கோர்ட்டில் தி.மு.க. சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த நிலையில் வாக்காளர் பட்டி




யல் திருத்த பணியை தேர்தல் ஆணையம் கைவிட கோரி தமிழகம் முழுவதும் தி.மு.க. கூட்டணி சார்பில் இன்று (செவ்வாய்க்கிழமை) 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதன்படி சென்னை தங்கசாலையில் கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் ஆகியோர் கலந்துகொண்டு பேசுகிறார்கள். சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. சேப்பாக்கம் சுவாமி சிவானந்தா சாலையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

# சபரிமலை சீசன்: திருச்சி வழியாக கொல்லத்துக்கு சிறப்பு ரெயில் இயக்கம்

திருச்சி, நவ.12

கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலை அய்யப்பன் கோவில் சீசனையொட்டி பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு திருச்சி வழியாக சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. வண்டி எண்: 07111 ஹசூர் சாஹிப் நந்தேத் கொல்லம் சிறப்பு ரெயில் வருகிற 20ந் தேதி, 27ந் தேதி மற்றும் டிசம்பர் 4ந் தேதி, 11ந் தேதி, 18ந் தேதி, 25ந் தேதி மற்றும் ஜனவரி மாதம் 1ந் தேதி, 8ந் தேதி, 15ந் தேதி ஆகிய (வியாழக்கிழமை) நாட்களில் ஹசூர் சாஹிப் நந்தேத் ரெயில் நிலையத்தில் இருந்து காலை 10 மணிக்கு புறப்பட்டு, சனிக்கிழமைகளில் அதிகாலை3 மணிக்கு கொல்லத்தை சென்று அடையும்.


இதே ரெயில் மறுமார்க்



கத்தில் வண்டி எண்: 07112 கொல்லம்ஹசூர் சாஹிப் நந்தேத் சிறப்பு ரெயில் வருகிற 22ந் தேதி, 29ந் தேதி, டிசம்பர் 6, 13, 20, 27ந் தேதிகள் மற்றும் ஜனவரி 3, 10, 17ந் தேதிகளில் கொல்லத்தில் இருந்து சனிக்கிழமைகளில் அதிகாலை 5.40 மணிக்கு புறப்பட்டு, மறுநாளான ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு ஹசூர் சாஹிப் நந்தேத் ரெயில் நிலையத்தை சென்று அடையும்.

இந்த மேற்கண்ட தகவலை திருச்சி ரெயில்வே கோட்ட அலுவலகம் சார்பில் தெரிவித்துள்ளனர்.

# மோட்டார் சைக்கிளில் பதுங்கியிருந்த பாம்பு.. போராடி பிடித்த தீயணைப்பு வீரர்கள்



திருப்பூர், நவ.12

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள போடிப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் கோபால்சாமி. தொழிலாளி. நேற்று இவர், மோட்டார் சைக்கிளில் உடுமலையை நோக்கி வந்து கொண்டிருந்தார். நகராட்சி அலுவலகம் அருகே வந்த போது, மோட்டார் சைக்கிளில் ஸ்பீடோ மீட்டர் அருகே பாம்பின் வால் பகுதி வெளியே தெரிந்தது. இதனால்அதிர்ச்சிஅடைந்த அவர் உடனடியாக மோட்டார் சைக்கிளை நிறுத்தினார். பின்னர் உடுமலை தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு படைவீரர்கள், பாம்பை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் பாம்பு, மோட்டார் சைக்கிளில் பெட்ரோல் டேங்க் அடிப்பகுதியில் பதுங்கி இருந்தது. இதனால் அந்தப் பாம்பை பிடிப்பதில் தொய்வு ஏற்பட்டது. இதனையடுத்து மெக்கானிக் வரவழைக்கப்பட்டு மோட்டார் சைக்கிளின் உதிரி பாகங்கள் பிரிக்கப்பட்டது. அதன் பின்னர் பாம்பு வெளியே தெரிந்தது. பின்னர் அந்தப்பாம்பு லாவகமாக பிடிக்கப்பட்டது. அது 4 அடி நீளமுள்ள கொம்பேறி மூக்கன் வகை பாம்பு ஆகும். அந்த பாம்பை தீயணைப்பு படைவீரர்கள், உடுமலை வனத்துறையிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து அந்த பாம்பு, உடுமலை வனப்பகுதியில் விடப்பட்டது.

இந்த சம்பவம் அங்கு சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# ஓடும் பஸ்சில் கர்ப்பிணியிடம் 18 பவுன் நகை திருட்டு: வாலிபர் கைது

சென்னை, நவ.12

செங்கல்பட்டு மாவட்டம் மண்ணிவாக்கம் குமரன் நகர் பகுதியை சேர்ந்தவர் டாக்டர் சரவணன். இவரது மனைவி பிரியா (வயது 30). தற்போது 6 மாத கர்ப்பிணியாக உள்ள பிரியா, கடந்த மாதம் 30 ந்தேதி தனது ஒரு வயது குழந்தையுடன் பஸ்சில் வேலூருக்கு சென்றார். படப்பை அருகே சென்ற போது பஸ்சில் இருந்த மர்மநபர், பிரியாவின் கவனத்தை திசை திருப்பி அவரது பையில் இருந்த 18 பவுன் நகையை திருடிச்சென்றுவிட்டார்.

இதுகுறித்த



புகாரின்பேரில் மணிமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபரை தேடி வந்தனர். இந்தநிலையில் கர்ப்பிணியிடம் நகை பறித்ததாக திருச்சி சாலக்குடி பகுதியை சேர்ந்த காசிநாதன் (30) என்பவரை போலீசார் கைது செய்தனர். திருடிய நகைகளை விற்று வைத்திருந்த ரூ.18 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

# சேலத்தில் சட்டவிரோதமாக தங்கி வேலை செய்த வங்காளதேசத்தை சேர்ந்த 12 பேர் கைது

சேலம், நவ.12

சேலம் கன்னங்குறிச்சி அடுத்த கோம்பைகாடு பகுதியில் உள்ள ஸ்வெட்டர் தயாரிக்கும் நிறுவனத்தில் தனிப்படை போலீசார் நேற்று மதியம் திடீரென சோதனை செய்தனர். அப்போது அங்கு வங்காளதேசத்தை சேர்ந்த 12 பேர் வேலை செய்து வந்தது தெரிந்தது. அவர்கள் சட்டவிரோதமாக அந்த நாட்டில் இருந்து சேலத்திற்கு வந்து குடியுரிமை பெறாமல் தங்கியது தெரியவந்தது.

இதையடுத்து ஒரு பெண் உள்பட 12 பேரையும் போலீசார்



அதிரடியாக கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட 12 பேரையும் போலீசார் தனி வேனில் அழைத்து சென்று ஆத்தூரில் உள்ள வங்காளதேச அகதிகள் முகாமில் தங்க வைத்தனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிரான தி.மு.க. மனு விசாரணை



புதுடெல்லி, நவ.12

தமிழ்நாடு, மேற்கு வங்காளம் உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை தேர்தல் கமிஷன் தொடங்கி உள்ளது. தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர திருத்தப்பணியை எதிர்த்து தி.மு.க. சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கு, நீதிபதிகள் சூர்யகாந்த், ஜோய்மால்யா பக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு (செவ்வாய்க்கிழமை) விசாரணைக்கு வருகிறது.

இதுபோல், பிற மாநிலங்களில் திருத்தப்பணிக்கு எதிராக பல்வேறு கட்சிகள் தாக்கல் செய்த மனுக்களும் அதே அமர்வில் விசாரணைக்கு வருகின்றன.

# வாக்காளர் சிறப்பு தீவிரத் திருத்தம்: சென்னையில் 16,35,596 பேருக்கு கணக்கீட்டுப் படிவம் வழங்கப்பட்டுள்ளது

சென்னை, நவ.12

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி அறிவிப்பு 27.10.2025 முதல் அறிவிக்கப்பட்டு, அதன் செயலாக்கத்திற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக, வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கீட்டுப் படிவத்தினை (Enumeration Form) வீடுவீடாகச் சென்று வழங்குவது தொடர்பாக பயிற்சிகள் 28.10.2025 முதல் 03.11.2025 வரை வழங்கப்பட்டது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் வாக்குச்சாவடி முகவர்களுக்கு 04.11.2025 அன்று முற்பகல் பயிற்சி வழங்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 40,04,694 வாக்காளர்களுக்கு 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுவீடாக சென்று கணக்கீட்டுப் படிவம் (Enumeration Form) 04.11.2025 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

04.11.2025 முதல் 10.11.2025 வரை இரவு 8 மணி 04.11.2025 முதல் 10.11.2025 வரை கணக்கீட்டுப் படிவம் வழங்கப்பட்ட விவரம்

மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் 04.12.2025க்குள் கணக்கீட்டுப் படிவம் வழங்கி வாக்காளரின் வீட்டிற்கு நேரடியாகச் சென்று ஏற்கனவே வாக்காளரிடம் வழங்கப்பட்ட 2 படிவங்களில் ஒன்றை பெற்றுக் கொண்டு,

அதற்கு ஆதாரமாக மற்றொரு கணக்கீட்டுப் படிவத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒப்புகை கையொப்பமிட்டு அதனை அந்த வாக்காளரிடம் வழங்குவார்.

வாக்காளர்கள் கணக்கீட்டுப் படிவங்கள் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் தகவல்களுக்கு 1950 என்ற தேர்தல் உதவி மைய எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களை தெரிந்துக் கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மது அருந்துவதை கண்டித்த பெற்றோர் வாலிபர் எடுத்த விபரீத முடிவு



சென்னை நவ.12

சென்னை ராஜா அண்ணாமலைபுரம் கே.வி.பி.கார்டனை சேர்ந்தவர் தட்சிணாமூர்த்தி. இவர் செக்யூரிட்டியாக வேலை பார்த்து வருகிறார். இவருடைய இளைய மகன் சந்தோஷ்குமார் (21 வயது), எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வந்தார். அவ்வப்போது கூலி வேலைக்கு செல்வதும் வழக்கம். இவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தாக தெரிகிறது. தீபாவளிக்கு பின்பு, சந்தோஷ்குமார் சரிவர வேலைக்குசெல்லவில்லை என்று கூறப்படுகிறது. வேலைக்கு சென்றாலும் அதன்சம்பளபணத்தை மது அருந்துவதற்கே செலவிட்டுள்ளார்.

இதனால் சந்தோஷ்குமாரின்பெற்றோர், 'மதுஅருந்த வேண்டாம்' என அவரை பலமுறை கண்டித்துள்ளனர். ஆனாலும் சந்தோஷ்குமார், நேற்று முன்தினம் அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார்.

இதனை பெற்றோர் மீண்டும் கண்டித்ததாக தெரிகிறது. இதனால் மனமுடைந்த சந்தோஷ்குமார் வீட்டின்பிரதானஅறையின் மின் விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதுகுறித்த தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த அபிராமபுரம் போலீசார், சந்தோஷ்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரித்து வருகின்றனர்.

# மகள் இறந்த துக்கத்தில் தாய் தீக்குளித்து தற்கொலை

திருநெல்வேலி, நவ.12

நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் அருகே உள்ள சிவந்திபுரத்தைச் சேர்ந்தவர் சுடலைமுத்து. இவருடைய மனைவி அமுதவள்ளி (55 வயது). இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு. மகளுக்கு திருமணமாகி விட்டது. கடந்த சில ஆண்டுகளுக்கு சுடலைமுத்து இறந்து விட்டார். பின்னர்கடந்த ஆண்டு அமுதவள்ளியின் மகளும் உடல்நலக்குறைவால் அம்பையில் இறந்து விட்டார். இதனால் அமுதவள்ளி மனமுடைந்த நிலையில் இருந்தார். அதிகாலையில் அமுதவள்ளி தனது வீட்டில் திடீரென்று உடலில் மண்எண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். இதில் உடல் கருகிய அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.



இதுகுறித்து தகவல் அறிந்த விக்கிரமசிங்கபுரம் போலீசார் விரைந்து சென்று, அமுதவள்ளியின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அம்பை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணைநடத்திவருகின்றனர்.

# கோவை இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கு; அணிவகுப்பு நடத்த போலீசார் மனுத்தாக்கல்

கோவை, நவ.12

கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் மதுரையை சேர்ந்த 21 வயது மாணவி முதுகலை பட்டப்படிப்பு படித்து வந்தார். இவரும், கோவையில் ஆட்டோ மொபைல்ஸ் கடை நடத்தி வரும் 25 வயது வாலிபரும் காதலித்து வந்தனர். இவர்கள் 2 பேரும் கோவை விமான நிலையத்தின் பின்புறம் பிருந்தாவன்நகர்காட்டு பகுதியில், கடந்த 2ந்தேதி இரவு காரில் அமர்ந்து பேசி கொண்டு இருந்தனர்.

நள்ளிரவு 11 மணி அளவில்அந்தவழியாகமொபட்டில் 3 பேர் வந்தனர். இருள் சூழ்ந்த பகுதியில் கார் நிற்பதை பார்த்து அருகில் சென்று பார்த்தனர். மேலும் கல்லூரி மாணவியை தூக்கி சென்று 3 பேரும் பாலியல் பலாத்காரம் செய்தனர்.இந்த சம்பவத்தை தடுக்க முயன்ற மாணவியின் காதலன் அரிவாளால் வெட்டப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



கோவையில் நடந்த இந்த பாலியல் பலாத்கார சம்பவம் தமிழக முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், இது தொடர்பாக 7 தனிப்படை அமைக்கப்பட்டு வாலிபர்கள் 3 பேரையும் போலீசார் தேடி வந்தனர். கடந்த 4ம் இரவு அந்த 3 பேரும் கோவை துடியலூர் வெள்ளக்கிணறு அருகே துப்பாக்கியால் சுட்டு பிடித்து கைது செய்தனர்.

விசாரணையில் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பகுதியை சேர்ந்த சதீஷ் என்ற கருப்பசாமி (வயது 30), கார்த்தி என்ற காளீஸ்வரன்(20). இவர்களது உறவினரான மதுரை கருப்பாயூரணியை சேர்ந்த குணா என்ற தவசி (20) என தெரிய வந்தது. இதில் சதீஷ், கார்த்தி ஆகியோர் அண்ணன், தம்பி ஆவர். இவர்கள் மீது கோவை கிணத்துக்கடவு பகுதியில் கொலை வழக்கு, பல்வேறு திருட்டு வழக்குகள் உள்ளன.

இந்த நிலையில், கோவை விமான நிலையத்தின் பின்புறம் இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கில், கைதான மூவரையும் அப்பெண் முன்பு அடையாள அணிவகுப்பு நடத்த அனுமதி கோரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் பீளமேடு போலீசார் மனு தாக்கல் செய்துள்ளனர்.

# அரசியல் கட்சி பொதுக் கூட்டங்களுக்கு முன்வைப்புத்தொகை செலுத்தும்படி கட்டாயப்படுத்தக் கூடாது: எஸ்டிபிஐ கட்சி

சென்னை, நவ.12

எஸ்டிபிஐ கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசு, சென்னை ஐகோர்ட்டின் பரிந்துரையின் அடிப்படையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பொதுக்கூட்டங்கள், பேரணிகள், ரோட் ஷோக்களுக்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை முன்மொழிந்துள்ளது. இதில், கூடும் மக்கள் எண்ணிக்கையைப் பொறுத்து 1 லட்சம் முதல் 20 லட்சம் ரூபாய் வரை முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், கூட்டங்களுக்கு 15 நாட்களுக்கு முன்பு அனுமதி கோர வேண்டும், கூட்டங்கள் 3 மணி நேரத்துக்குள் முடிக்க வேண்டும், பங்கேற்பாளர்களுக்கு குடிநீர், கழிப்பறை ஏற்பாடு செய்ய வேண்டும், மேடைக்கு பொறியாளர் சான்றிதழ் பெற வேண்டும் போன்ற விதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், குடிமக்களுக்கு கருத்துரிமை, பேச்சுரிமை மற்றும்ஒன்றுகூடும்உரிமை ஆகியவற்றை அடிப்படை உரிமைகளாக வழங்கியுள்ளது. இவை பிரிவு 19(1)ன் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், மக்கள் பிரச்சினைகளுக்காக அரசியல் கட்சிகள் மேற்கொள்ளும் பேரணி, பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு முன்வைப்புத் தொகை நிர்ணயிப்பது என்பது சிறிய மற்றும் எதிர்க்கட்சிகளின், மக்கள் நலன் விரும்பும் கட்சிகளின் செயல்பாடுகளை முடக்கும் வகையில் உள்ளது.




அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் கூட்ட நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசு மற்றும் காவல்துறையின் கடமையாகும். அதற்காக வைப்புத் தொகை செலுத்த வேண்டும் என்பதை ஏற்க முடியாது. அரசியல் கட்சிகள் அவற்றின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்ல பொதுக்கூட்டங்கள் தான் ஒரே வழியாகும். பல சிறிய கட்சிகள் நன்கொடை வசூலித்துத்தான் கூட்டங்களை நடத்துகின்றன. அவை வைப்புத் தொகை செலுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டால், அக்கட்சிகளால் அதனை நிறைவேற்ற முடியாது.

ஐகோர்ட்டின் யோசனையாக இருந்தாலும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் கடமை கொண்ட அரசுக்கு இதுபோன்ற யோசனையை நிராகரிக்க அனைத்து அதிகாரங்களும் உண்டு. அரசியல் கட்சிகளின் நிகழ்வுகளில் பொதுச்சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டால் அதற்காகச் சம்பந்தப்பட்ட கட்சிகளிடமிருந்து தண்டம் வசூலிக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள நிலையில், கூட்டங்களுக்கு வைப்புத்தொகை செலுத்தும்படி கட்டாயப்படுத்தக் கூடாது.

அதோடு அனுமதிக்கப்பட்ட இடங்களில் நடத்தும் நிகழ்ச்சிக்கு அனுமதி கோரி 10 நாட்கள் முன்பாகவும், 15 நாட்களுக்கு மிகாமலும் மனு அளிக்க வேண்டும். மற்ற இடங்களுக்கு 21 நாட்கள் முன்பாகவும், 30 நாட்களுக்கு மிகாமலும் மனு அளிக்க வேண்டும் என்கிற நிபந்தனையும் ஏற்புடையதல்ல. ஏனெனில் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கு அவ்வப்போது போராட்டங்கள் மூலமாக தீர்வு கிடைக்க இந்த விதிமுறை முட்டுக்கட்டையை ஏற்படுத்தும்.

காவல்துறைக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் நோக்கிலான விதிமுறைகளாக இவை உள்ளன. ஏற்கெனவே அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் காவல்துறை பல்வேறு நெருக்கடிகளை அளித்துவரும் நிலையில், இந்தப் பரிந்துரைகள் அமலாக்கப்பட்டால் அது இன்னும் காவல்துறையின் நெருக்கடிக்கு ஆளாக்கும்.

ஆகவே, தமிழக அரசு இந்த கூட்டங்களுக்கான முன்வைப்புத்தொகை விதிமுறை, 15 நாட்களுக்கு மிகாமல் முன் அனுமதி மனு உள்ளிட்ட ஜனநாயக குரல்களை தடுக்கும் வகையிலான முன்மொழிவை கைவிட வேண்டும். மாறாக, பொதுக்கூட்டங்களில் விதிகளும், ஒழுங்கும், கட்டுப்பாடும் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் விதிகளை வகுக்கவேண்டும். மேலும், அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமையை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், மக்களுக்கும் உள்ளது என்பதை இதனூடாக உறுதிப்படுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் அனைத்து ஜனநாயகசக்திகளும் இத்தகைய முன்மொழிவை எதிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# லாரி லோடு ஆட்டோ நேருக்கு நேர் மோதல்; 2 பேர் படுகாயம்

செங்கம்

செங்கத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு நேற்று காலை லாரி சென்றது. முறையாறு அருகே திருவண்ணாமலை பெங்களூர் சாலையில் சென்றபோது, எதிரே தஞ்சாவூரிலிருந்து டிஜிட்டல் பேனர்களை ஏற்றிக்கொண்டு திருப்பத்தூர் நோக்கி சென்ற லோடு ஆட்டோவும், லாரியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டது.

இந்த விபத்தில், லோடு ஆட்டோ நொறுங்கியது. இடிபாட்டில் சிக்கிய தஞ்சாவூரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் வெங்கடேசன் மற்றும் தர்மா ஆகிய 2 பேரும் படுகாயமடைந்தனர். அப்போது அவ்வழியாக சென்றவர்கள், இடிபாட்டில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த செங்கம் போலீசார் சம்பவ இடம் வந்து பொதுமக்களுடன் சேர்ந்து 2 பேரையும் மீட்டனர். பின்னர் அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்தில் சிக்கிய லாரியின் டிரைவர் லாரியை விட்டுவிட்டு தப்பியோடிவிட்டார்.



விபத்து காரணமாக, அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து விபத்துக்குள்ளான வாகனங்களை போலீசார் அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீரமைத்தனர். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய லாரி டிரைவர தேடி வருகின்றனர்.

நான்கு வழிச்சாலையாக மாற்ற மக்கள் கோரிக்கை

திருவண்ணாமலை பெங்களூரு நெடுஞ்சாலையில், குறிப்பாக செங்கம் சுற்றுவட்டார பகுதிகளில், விபத்துகள் அதிகரித்து வருகிறது. இந்த சாலை குறுகிய இருவழிச்சாலையாக இருப்பதுதான் காரணம் எனக்கூறப்படுகிறது. எனவே இந்த இருவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# ஜோதியம்பட்டியில் விவசாயிகள் பொதுக்கூட்டம் : "பூஜ்ஜியம் நில மதிப்பு - விவசாயிகள் வாழ்வாதாரத்தை பறிக்கும் அரசின் சட்டவிரோதம்!" - வழக்கறிஞர் ஈசன் முருகசாமி கண்டனம்

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்துள்ள குண்டடம் ஊராட்சி ஒன்றிய ஜோதியம்பட்டியில், தமிழக இந்து அறநிலைத்துறையின் "பூஜ்ஜியம்நிலமதிப்பு" நடவடிக்கைக்கு எதிராக, விவசாயிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு பொதுக்கூட்டம் நடத்தினர்.

இந்தக் கூட்டம் ஜோதியம்பட்டி ஸ்ரீ மாகாளியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள்பாதுகாப்பு சங்கம் சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில், 500க்கும் மேற்பட்ட 30 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்துக்கு, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர் வழக்கறிஞர் ஈசன் முருகசாமி தலைமை வகித்தார். தலைவர் விஸ்வநாதன் முன்னிலை வகித்தார்.

வழக்கறிஞர் ஈசன் முருகசாமிஉரையில்கூறியதாவது:

"தமிழ்நாடு இந்து சமய அறநிலைத்துறை, விவசாயிகளின் உரிமை பெற்ற இனாம்நிலங்களையும் வீடு மனைகளையும் பூஜ்ஜியம் நில மதிப்பாக அறிவித்துள்ளது. இதனால், தமிழ்நாடு முழுவதும் 13 லட்சம் ஏக்கர் நிலத்தில், 30 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

அரசு, விவசாயிகளின் வீடுகளை பூட்டி வைப்பது, பட்டாக்களை ரத்து செய்வது, 70 ஆண்டுகளாக வசித்து வரும் விவசாயிகளை ஆக்கிரமிப்பாளர்கள் எனக் கூறுவது போன்ற சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது," என அவர் தெரிவித்தார்.




அவர் மேலும் கூறினார்:

"இனாம்நிலப் பிரச்சனைக்கும் கோவில் நிலப் பிரச்சனைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இதனை நாம் இந்தியச் சட்டப்படி ஆதாரங்களுடன் நிரூபித்து காட்டியுள்ளோம். சில அரசியல் கட்சிகள் மட்டுமே விவசாயிகளின்நியாயத்தை ஒப்புக்கொண்டு ஆதரவு அளித்து வருகின்றன.

முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள், 'எல்லோருக்கும் எல்லாம் வேண்டும்' எனக் கூறுபவர் என்றாலும், அவருடைய ஆட்சியில் விவசாயிகளின் நில உரிமை பாதுகாக்கப்படவில்லை. அவரின் தந்தை கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது சட்டப்படி வழங்கப்பட்ட பட்டாக்களை இப்போது ரத்து செய்வது பொருத்தமற்றது.

இதைப் பற்றி பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனும் தெளிவாக கூறியுள்ளார் – 'பூஜ்ஜியம் நில மதிப்பு' விவகாரத்திற்கும் பாஜகக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தியா முழுவதும் இனாம்நிலங்கள் எவ்வாறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறதோ, அதே போல தமிழகத்திலும் வழங்க வேண்டும்," என அவர் வலியுறுத்தினார்.

புதிய சட்டம் கொண்டு வாருங்கள்" – விவசாயிகள் கோரிக்கை

"உலக வரலாற்றிலேயே விவசாயியின் நிலத்தை பறித்து அவரை வெளியேற்றிய அரசு எதுவும் இல்லை. ஆனால், தமிழகத்தில் திமுக ஆட்சியில் இது தொடர்ந்து நடக்கிறது.

2026 சட்டமன்றத் தேர்தலில் 30 லட்சம் பூஜ்ஜியம் நில விவசாயிகளின் வாக்குகள் திமுகக்கு வேண்டுமென்றால், அவர்களின்நில உரிமையை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் கொண்டு வர வேண்டும்," என வழக்கறிஞர் ஈசன் முருகசாமி வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறினார்:

"மாவட்டம் தோறும் விவசாயிகளை நேரில் சந்தித்து, திமுக அரசின் நிலக் கொள்கைக்கு எதிராக பெரிய அளவில் கூட்டங்களைநடத்தி வருகிறோம். விவசாயிகளின் உரிமைக்காக, 30 லட்சம் வாக்குகள் தங்கள் சக்தியாக மாறும்," என்றார்.

10 அம்ச கோரிக்கை வலியுறுத்தல்

இக்கூட்டத்தில், விவசாயிகள்பாதுகாப்புசங்கம்சார்பில் 10 அம்சகோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. அதில்,

அனைத்து விவசாயிகளின் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30,000 உற்பத்தி மானியம் வழங்க வேண்டும்.

மேலும், டிசம்பர் 28, 2025 அன்று ஈரோடு விஜயமங்கலம் டோல்கேட் அருகே நடைபெற உள்ள தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் முதல் மாநில மாநாடு குறித்தும் அறிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில், இந்தியா முழுவதிலுமிருந்து பல்வேறு விவசாய சங்க தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். "இது அரசியலுக்கு அப்பாற்பட்ட சங்கம். திமுக, அதிமுக, பாஜக எந்தக் கட்சிக்கும் சார்பில்லாதது; இது முழுக்க முழுக்க விவசாயிகளுக்காக மட்டுமே செயல்படும் அமைப்பு," என வழக்கறிஞர் ஈசன் முருகசாமி வலியுறுத்தினார்.

பலகை திறப்பு மற்றும் கொடி ஏற்றம்

இக்கூட்டம் முடிவில், ஜோதியம்பட்டிகிராமத்தில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் பெயர் பலகை திறப்பு விழா நடைபெற்றது.

பலகையை நிறுவனர் வழக்கறிஞர் ஈசன் முருகசாமி திறந்து வைத்தார்.

சங்கக்கொடியை, கிழக்கு மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன் ஏற்றி வைத்தார்.

பேட்டி:

வழக்கறிஞர் ஈசன் முருகசாமி,

நிறுவனர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்.

# இலங்கை கடற்படையினர் கைது செய்த தரங்கம்பாடி மீனவர்களை மீட்க வேண்டும் மு.வீரபாண்டியன்

சென்னை, நவ.12

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி ராமையன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில், அந்த ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன், சிவதாஸ், குழந்தை வேல், ரஞ்சித், ராஜ், கலை, குகன், பிரசாத்,

அகிலன், ஆகாஷ், ராபின் மற்றும் ராஜ்குமார் ஆகிய 14 மீனவர்கள் கடந்த 3 ஆம் தேதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் ஜெகதா பட்டினம் அருகில் மீன்பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த போது, படகு பழுதடைந்துள்ளது. பழுதடைந்த படகை சீர்படுத்திக் கொண்டு, 08.11.2025 ஆம் தேதி மீண்டும் கடலுக்குள் சென்றுள்ளனர். கடலுக்குள் சென்ற படகு மீண்டும் பழுதடைந்து தமிழக எல்லையில் தத்தளித்து நின்றுள்ளது.



இந்த நேரத்தில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் 14 பேரையும் கைது செய்து, இலங்கைக்கு கொண்டு சென்றுள்ளனர். இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்களை கைது செய்வதும், தாக்குதுவதும், அவர் வசம் இருக்கும் பொருட்களை பறிமுதல் செய்வது, பறிமுதல் செய்த பொருட்கள் இலங்கைக்கு சொந்தமானது என அபகரித்துக் கொள்வதுமான அத்துமீறல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழக மீனவர்கள் மீன்பிடி உரிமையை பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும் என தமிழ்நாடு முதல்அமைச்சரும், மீனவர் அமைப்புகளும் கடிதங்கள்வாயிலாகதொடர்ந்து வற்புறுத்தி வரும் போதும், மத்திய அரசும், அயலுறவுத்துறை அமைச்சகமும் அலட்சியம் காட்டி வருகிறது. இதனால், இலங்கை கடற்படையின் அத்துமீறல் தொடர்கிறது. மத்திய அரசு அலட்சியப் போக்கை கைவிட்டு, இலங்கை கடற்படையினரால் கைது செய்து, கொண்டு செல்லப்பட்ட தரங்கம்பாடி மீனவர்களை விடுவித்து கொண்டு வர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
12.11.2025

# அண்ணாமலை பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் ராமதாஸ்



சென்னை, நவ.12

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நீண்ட காலமாக போராடிவரும் அண்ணாமலை பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்களின்கோரிக்கைகளைநிறைவேற்றஉடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

நூற்றாண்டு கால வரலாறு கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள்,

ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் பிரச்சனைகளை உடனே தீர்க்க வேண்டியது அவசியம் ஆகும். ஆசிரியர்கள், ஊழியர்கள் கோரிக்கைகள் நிறைவேற தாமதமாவதாலும், அவர்கள் உரிமையை பெற்றாக வேண்டி போராட்டங்களை நடத்துவதற்கு ஆளாக்கப்பட்டு உள்ளனர்.

ஏழாவது ஊதியக்குழு நிலுவைத் தொகைகளை வழங்குதல், முனைவர் பட்ட ஊக்கத் தொகைகளை வழங்குதல், ஆசிரியர்களுக்கான CAS பதவி உயர்வுகளை தாமதமின்றி வழங்கல், அயற்பணியிட ஆசிரியர்களை உள்ளெடுப்பு செய்தல், பல்கலைக்கழக துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை அயற்பணியிட ஆசிரியர்களைக் கொண்டு யு.ஜி.சி மற்றும் தமிழக அரசின் விதிமுறைகளின்படிவாரத்திற்குஒருவருக்குவேளைப்பளு 16/14 மணிநேரம் என்ற விகிதத்தில் கணக்கிட்டு திரும்ப அழைத்தல், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அரசுத்துறைகளைப் போலவே அனைத்து பணப்பயன்களையும் ஓய்வு பெற்றவுடன் வழங்குதல், 2019 CAS, போர்டு தொடர்பாக கட்டாய படிப்புகள் (Mandatory Courses) விசயத்தில் யு.ஜி.சி மற்றும் தமிழக அரசு விதிமுறைகளுக்கு எதிரான ஆட்சிக்குழு தீர்மானத்தை கைவிடுதல், ஆட்சிக்குழு மற்றும் கல்விக் குழுக்களில் ஆசிரியர் சங்கங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கல், அனைத்து நிர்வாகப் பொறுப்பு காலியிடங்களும் நிரப்புதல், 3 ஆண்டுகள் பதவிக்காலம் முடிந்த அனைவரும் நீக்கப்பட்டு புதியவர்கள் நியமித்தல், ஆசிரியர்களுக்கான Superannuation (ஓய்வூதியம்) உரிமை திரும்ப வழங்கல் ஆகிய ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கைகளுக்காக அவர்கள் கடந்த 15 ஆண்டுகளாக பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனாலும் அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு, போராடி பெற்ற சட்டப்படியான உரிமைகளும் கூட ஒவ்வொன்றாக பறிப்பப்படுகிறது. இவைகள் அவர்களது உரிமைக்கு எதிரானது.

நீண்ட காலமாக தகுதிக்கு ஏற்ற உரிமைகள் மறுக்கப்படுவதாக அவர்கள் போராடி வருகின்றனர். ஆகவே ஆசிரியர்கள், ஊழியர்களின் மேற்கண்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட பல்கலைக்கழக நிர்வாகமும், தமிழக அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை கண்டித்து திமுக கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்



சென்னை, நவ.12

தமிழகத்தில் அடுத்த ஆண்டு (2026) நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலைமுன்னிட்டு எஸ்.ஐ.ஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. எனவே தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சுப்ரீம்கோர்ட்டில் தி.மு.க. சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வர உள்ளது. இந்த நிலையில் வாக்காளர் பட்டியல் திருத்த பணியை தேர்தல் ஆணையம் கைவிட கோரி தமிழகம் முழுவதும் தி.மு.க. கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. சென்னைதங்கசாலையில் கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் நடைபெற்று வரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் ஆகியோர் கலந்துகொண்டு பேசுகிறார்கள். சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. சேப்பாக்கம் சுவாமி சிவானந்தா சாலையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக பதாகைகளும், கோஷங்களும் எழுப்பட்டன.

# திசையன்விளை அருகே இளம்பெண் வீட்டு ஓட்டை பிரித்து உள்ளே குதிக்க முயன்ற வாலிபர்கள்

திசையன்விளை, நவ.12

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள ஒரு பகுதியை சேர்ந்தவர் 33 வயது இளம்பெண். இவருக்கு திருமணமாகி 2 மகள்கள் உள்ளனர். அவரது கணவர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இதனால் அவர் தனது குழந்தைகளுடன் தனியாக வசித்து வருகிறார். நேற்று முன்தினம் நள்ளிரவு இளம்பெண் உள்பட 3 பேரும் வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்தனர்.

அப்போது மர்மநபர்கள் 2 பேர் திடீரென இளம்பெண்ணின் வீட்டின் மேற்கூரையில் ஏறினர். அங்கிருந்த ஓடுகளை பிரித்து உள்ளே எகிறி குதிக்க முயன்றார்கள் சத்தம் கேட்டு எழுந்த இளம்பெண், இதைக்கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனே அவர் திருடன்...திருடன்! என்று கூச்சலிட்டார். அவரது அலறல் சத்தம் கேட்டதும் பக்கத்து வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் அங்கு ஓடி வந்தனர்.

இது தொடர்பாக அதே பகுதியில் வசிக்கும் ரஞ்சித் (19) ராஜேஷ்குமார் (29) ஆகியோரை பிடித்து தர்மஅடி கொடுத்தனர். இதையடுத்து ரஞ்சித், ராஜேஷ் குமாரை போலீசார் கைது செய்தனர்.

# நீர் பாதுகாப்பு திட்டங்களில் முதல் இடம் பிடித்த தெலுங்கானாவுக்கு விருது அறிவிப்பு

புதுடெல்லி, நவ.12

நாட்டில்பாதுகாப்புக்கானதிட்டங்களைசெயல்படுத்தி வரும் மாநிலங்களுக்கு மத்திய ஜலசக்தி துறை சார்பில் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டில் மாநிலங்கள், மாவட்டங்கள், தொடர்புடைய அமைச்சகங்கள், என்.ஜி.ஓ.க்கள், ஆலைகள், நகராட்சி அமைப்புகள், நன்கொடையாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் என 100 விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இதில், தெலுங்கானா 5.2 லட்சம் நீர் பாதுகாப்பு கட்டமைப்புகளை உருவாக்கி முதல் இடம் பிடித்து உள்ளது. சத்தீஷ்கார் 4.05 லட்சம் நீர் பாதுகாப்பு கட்டமைப்புகளுடன் 2வது இடமும், ராஜஸ்தான் 3.64 லட்சம் நீர் பாதுகாப்பு கட்டமைப்புகளுடன் 3வது இடமும் பிடித்துள்ளன.

வருகிற 18ந்தேதி நடைபெறும் 6வது தேசிய நீர் விருதுகள் வழங்கும் விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு இந்த விருதுகளை வழங்குகிறார். வடக்கு மண்டலத்தில் உத்தர பிரதேசம் விருது பெறுகிறது. அதன் 3 மாவட்டங்களான மிர்சாபூர், வாரணாசி, ஜலான் ஆகியவை தலா ரூ.2 கோடி பரிசை பெறும்.

கிழக்கு மண்டலத்தில் சத்தீஷ்கார், தெற்கு மண்டலத்தில் தெலுங்கானா, மேற்கு மண்டலத்தில் மத்திய பிரதேசம், வடகிழக்கு மற்றும் மலைப்பிரதேச மாநிலங்களின் பிரிவுகளுக்கான மண்டலத்தில் திரிபுரா ஆகியவையும் இடம்பிடித்துள்ளன. இந்த விருதுகளுக்கு தமிழகம், பீகார், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களின் 67 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன. நீரின் தேவையை உணர்ந்து அதற்கேற்ப மாநிலங்கள் மற்றும் மக்கள் செயல்பட ஊக்குவிக்கும் வகையில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் (12.11.2025)

மேஷம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

ரிஷபம்: உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

மிதுனம்: சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

கடகம்: வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

சிம்மம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

கன்னி: நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

துலாம்: புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

விருச்சிகம்: உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

தனுசு: வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

மகரம்: அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

கும்பம்: புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

மீனம்: மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# தருமபுரி மாவட்டத்திற்கு கொடுத்த வாக்குறுதிகள்; சொன்னீங்களே செஞ்சீங்களா நயினார் நாகேந்திரன்



சென்னை, நவ.12

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தருமபுரியில் வன வளங்கள் சார்ந்த கல்வியை மேம்படுத்தும் நோக்கில் புதிய வனயியல் கல்லூரி துவங்கப்படும் என்றும்,

பேரீச்சை உற்பத்தி மற்றும் பேரீச்சை சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் அரசு மானியத்துடன் கூடிய சிறப்பு நிதியுதவி வழங்கப்படும் என்று சொன்னீங்களே, செஞ்சீங்களா முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினே?

தமிழகத்தில் ஏற்கனவே செயல்பாட்டில் இருக்கும் அரசுக் கல்லூரிகளின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத திமுக அரசு, தருமபுரியில் புதிய வனயியல் கல்லூரி திறக்கப்படும் என்று பொய் கூறி அம்மக்களை நம்ப வைத்து ஏமாற்றியுள்ளது.

விவசாயிகளின் உற்ற தோழன் போல மேடைகளில் வசனம் பேசும் முதல்வரோ, திமுகவின் தேர்தல் வாக்குறுதியை நம்பி பேரீச்சை பயிரிட்ட தருமபுரி விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளார். இதுதான் நாடு போற்றும் நல்லாட்சியின் லட்சணமா?

நெல், கரும்பு, மாம்பழம், பேரீச்சை, தேங்காய் உள்ளிட்ட எந்த விவசாயிகளும் திமுக ஆட்சியில் நிம்மதியாக இல்லை, மக்களும் பாதுகாப்பாக இல்லை, கல்வித்தரமும் மேம்படவில்லை, சுகாதாரமும் சிறக்கவில்லை, இப்படிப்பட்ட ஒரு அவல ஆட்சி இனி மக்களுக்குத் தேவையும் இல்லை. தேர்தல் நேரத்தில் வாயில் வந்த வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து மக்களை ஏமாற்றும் திமுகவின் மாயாஜாலம் இனி தமிழக மக்களிடையே எடுபடப் போவதுமில்லை!

இவ்வாறுஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஷிகா ரங்கநாத்தின் புதிய படம்... வெளியாகிறது டைட்டில்




நடிகர் ரவி தேஜா கடைசியாக பானு போகவரபு இயக்கிய மாஸ் ஜதாராவில் நடித்தார். அந்தப் படம் பலரும் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை, இப்போது அவர் தனது முழு கவனத்தையும் இயக்குனர் கிஷோர் திருமலா இயக்கும் தனது அடுத்த படமான அவரது ஆர்டி76ல் செலுத்தியுள்ளார்.

இப்படத்தில்அவருக்கு ஜோடியாக ஆஷிகாரங்கநாத் நடிக்கிறார். இந்த படத்தை சுதாகர் செருகுரி தயாரிக்க பீம்ஸ் செசிரோலியோ இசையமைக்கிறார். இப்படம் அடுத்த ஆண்டு பொங்கலுக்கு வெளியாக தயாராகி வருகிறது.

இந்நிலையில், இப்படத்தின் முக்கிய அப்டேட் வெளியாகி இருக்கிறது. அதன்படி, இப்படத்தின் டைட்டில் மற்றும் பர்ஸ்ட் லுக் நாளை மாலை 3.33 மணிக்கு வெளியாகும் என்று தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# முனீஷ்காந்துக்கு ஜோடியாக நடித்தது ஏன்? நடிகை விஜயலட்சுமி விளக்கம்




'சூது கவ்வும்', 'முண்டாசுப்பட்டி', 'ஜிகர்தண்டா', 'டார்லிங் 2', 'மாநகரம்', 'டிடி ரிட்டன்ஸ்', 'கேங்கர்ஸ்' போன்ற பல படங்களில் நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடித்தவர், முனீஸ்காந்த். நகைச்சுவையில் அசத்தி வந்த முனீஸ்காந்த் தற்போது 'மிடில் கிளாஸ்' என்ற படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். கிஷோர் முத்துராமலிங்கம் இயக்கியுள்ள இப்படத்தினை தேவ் மற்றும் கே.வி.துரை இணைந்து தயாரித்திருக்கிறார்கள். மிடில் கிளாஸ் தம்பதிகளாக முனிஷ்காந்த் மற்றும் விஜயலட்சுமி நடித்திருக்கிறார்கள். இவர்களுடன்காளி வெங்கட், ராதாரவி, குரேஷி, மாளவிகா அவினாஷ், கோடங்கி வடிவேலு மற்றும் வேல ராமமூர்த்தி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்தில் முனீஷ்காந்த் மனைவியாக விஜயலட்சுமி நடித்துள்ளார்.

'மிடில் கிளாஸ்' படத்தின் டிரெய்லர் வரும் 11ம் தேதி மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படம் வருகிற 21ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

பிரபல கதாநாயகியான விஜயலட்சுமி நகைச்சுவை நடிகர் முனீஷ்காந்துடன் ஜோடியாக நடித்தது எப்படி? என்று கேட்ட போது அவர் "நான் எப்போதும் படத்தின் கதாபாத்திரத்தை பார்த்து படத்தில் நடிப்பதில்லை. கதையை பார்த்துதான் படத்தில் நடிப்பதற்கு சம்மதிப்பேன். கேரக்டர் சரியாக இருந்து கதை சரியில்லை எனில் மொத்த படமும் வீணாக போய்விடும். அதுபோல் படத்தின் கதையை இயக்குனர் என்னிடம் சொன்ன போது நான் எதிர்பார்த்த கதை அமைந்திருந்தது. எனவே படத்தில் நடிப்பதற்கு சம்மதித்தேன்" என கூறினார்.

முனீஷ்காந்த் கூறும் போது, "படத்தில் எனக்கு ஜோடி விஜயலட்சுமி என்று டைரக்டர் கூறியதும், 'எப்படி சமமதித்தார்' என அவரிடம் கேட்டேன். 'கதையை கேட்டு சம்மதித்தார்" என கூறினார். அதுபோல் படத்தின் கதைக்கேற்ப கதாபாத்திரமாகவே வாழ்ந்துள்ளார் விஜயலட்சுமி. இவ்வாறு முனீஷ்காந்த் கூறினார்.

# எனது கணவர் நலமுடன் இருக்கிறார் நடிகை ஹேமமாலினி பரபரப்பு பதிவு



இந்தி திரையுலகின் பழம்பெரும் நடிகர் தர்மேந்திராவுக்கு, 89 வயது ஆகிறது. கடந்தசிலநாட்களாகஅவரதுஉடல்நிலைமோசமாகஇருந்ததால், மும்பையில் உள்ள பிரீச் கேண்டி தனியார் ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் இன்று காலை உயிரிழந்துவிட்டதாக செய்திகள் வெளியாகின. இது திரையுலகில் சோகத்தை ஏற்படுத்தியது. அத்துடன் இவரது மறைவிற்கு பலரும் இரங்கலை தெரிவித்தனர்.

ஏற்கனவே தர்மேந்திராவின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவர் வெண்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்று வருவதாகவும் செய்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. இதற்கு அவரது குடும்பம் மறுப்பு தெரிவித்து குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நடிகர் தர்மேந்திரா உயிருடன் இருப்பதாக அவருடைய மனைவியும் நடிகையும் எம்.பி.யுமான ஹேமமாலினி தனது எக்ஸ் பக்கத்தில் பரபரப்பான பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "நடப்பது மன்னிக்க முடியாதது! சிகிச்சைக்கு பதிலளித்து குணமடைந்து வரும் ஒரு நபரைப் பற்றி பொறுப்புள்ள சேனல்கள் எப்படி பொய் செய்திகளை பரப்ப முடியும்? இது மிகவும் அவமரியாதையான மற்றும் பொறுப்பற்ற செயல். எங்கள் குடும்பத்தினரின் தனியுரிமைக்கு உரிய மரியாதை கொடுங்கள்" என்று பதிவிட்டுள்ளார். அவரைத்தொடர்ந்து தர்மேந்திராவின் மகள் ஈஷா தியோல் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "என் தந்தை நலமுடன் உள்ளார், குணமடைந்து வருகிறார். அவர் விரைவில் குணமடைய பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றி" என பதிவிட்டுள்ளார்.

# உலக துப்பாக்கி சுடுதல்: இந்திய வீரர் சம்ரத் ராணா தங்கம் வென்று அசத்தல்




உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீரர் சம்ரத் ராணா அசத்தினார். அவர் 8 பேர் இடையிலான இறுதி சுற்றில் மொத்தம் 243.7 புள்ளிகள் எடுத்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். சீனாவின் ஹூ காய் 243.3 புள்ளிகளுடன் வெள்ளிப்பதக்கமும், இந்திய வீரர் வருண் தோமர் 221.7 புள்ளிகளுடன் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

இதுவரை இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 9 பதக்கம் வென்று பதக்கப்பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது. சீனா 6 தங்கம் உள்பட 12 பதக்கத்துடன் முதலிடம் வகிக்கிறது.

# ஐ.பி.எல்.: சாம்சனுக்காக ஜடேஜாவை தோனி... இந்திய முன்னாள் வீரர்




19வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலத்தை அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதையொட்டி தக்கவைக்கப்படும் மற்றும் விடுவிக்கப்படும் வீரர்களின் பட்டியலை வருகிற 15ந்தேதிக்குள் 10 அணிகளும் சமர்ப்பிக்க கெடு விதிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பக்கம் வீரர்கள் பரிமாற்றத்துக்கான பரஸ்பர பேச்சுவார்த்தையும் நடந்து வருகிறது.

இதில் முக்கியமான ஒன்றாக ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கேப்டனும், விக்கெட் கீப்பருமான சஞ்சு சாம்சனை பரிமாற்றம் முறையில் எடுக்க சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி வருவது கவனிக்கத்தக்கது. அதற்கு ஈடாக ஆல்ரவுண்டர்கள் ரவீந்திர ஜடேஜா, சாம் கர்ரன் ஆகியோரை தரும்படி ராஜஸ்தான் நிர்வாகம் கேட்டுள்ளதாக தெரிகிறது. சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகமும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

இதில் ரவீந்திர ஜடேஜா 2012ம் ஆண்டில் இருந்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஆடுகிறார். 2023ம் ஆண்டு ஐ.பி.எல்.ல் குஜராத்துக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் ஜடேஜா கடைசி பந்தில் பவுண்டரி அடித்து வெற்றி தேடித்தந்ததை மறந்து விட முடியாது. கடந்த சீசனில் அவரை ரூ.18 கோடிக்கு சென்னை அணி தக்க வைத்திருந்தது. அப்படிப்பட்ட அவரை சிஎஸ்கே வேறு அணிக்கு மாற்ற உள்ளது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் அணியின் நலனுக்காக ஜடேஜாவை விட்டுக்கொடுக்க தோனி துணிந்து விடுவார் என இந்திய முன்னாள் வீரர் முகமது கைப் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "ஐ.பி.எல். கிரிக்கெட் தொடங்கிய 2008ம் ஆண்டில் இருந்தே தோனியும், ஜடேஜாவும் விளையாடி வருகிறார்கள். இதில் தோனி சென்னை அணியை விட்டு ஒரு போதும் வெளியேறியதில்லை. சாம்சன், ஜடேஜா வர்த்தக பரிமாற்றம் வெற்றிகரமாக நடந்தால் இதுவே தோனியின் கடைசி ஐ.பி.எல். சீசனாக இருக்கும். சாம்சன் சி.எஸ்.கே.வில் இணைந்து தோனி மற்றும் அணி நிர்வாகத்துடனும் எளிதில் பழகி விட்டால் ஒரு வேளை அவரிடம் கேப்டன்ஷிப்பை ஒப்படைத்து விட்டு பாதியிலேயே டோனி விலக வாய்ப்புள்ளது.

சி.எஸ்.கே. ஏற்கனவே ஜடேஜாவை கேப்டனாக்கி பார்த்தது. ஆனால் அது தனக்கு சவுகரியமாக இல்லை என கூறி பாதியிலேயே ஜடேஜா ஒதுங்கி விட்டார். இனி, நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் அணியை வழிநடத்தக்கூடிய ஒரு வீரரை கொண்டு வருவதையே தோனி விரும்புவார்.

கடந்த முறை சி.எஸ்.கே. அணி 10வது இடத்துக்கு தள்ளப்பட்டது. ஆனால் இந்த தடவை வலிமையாக மீண்டு வந்து மற்றொரு முறை கோப்பையை கையில் ஏந்த வேண்டும் என்பதே அவரது மிகப்பெரிய லட்சியமாகும். தோனிக்கு அணியின் நலன்தான் மிகவும் முக்கியம். எனவே அணியின் நலனுக்காக ஜடேஜாவை தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால், அதை நிச்சயம் தோனி செய்வார்" என்று கூறினார்.

# ஜூனியர் மகளிர் உலகக்கோப்பை ஆக்கி: இந்திய அணி அறிவிப்பு




11வது ஜூனியர் மகளிர் (21 வயதுக்கு உட்பட்டோர்) உலகக்கோப்பை ஆக்கி போட்டி சிலி தலைநகர் சான்டியாகோவில் அடுத்த மாதம் 1ந் தேதி முதல் 13ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்கும் 24 அணிகள் 6 பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் லீக்கில் மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள் மற்றும் 2வது இடம் பெறும் 2 சிறந்த அணிகள் என மொத்தம் 8 அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் 'சி' பிரிவில் இடம்பிடித்துள்ள இந்திய அணி, தனது முதலாவது ஆட்டத்தில் நமிபியாவையும் (டிச.1), 2வது ஆட்டத்தில் ஜெர்மனியையும் (டிச.3), 3வது மற்றும் கடைசி ஆட்டத்தில் அயர்லாந்தையும் (டிச.5) சந்திக்கிறது.

இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஜோதி சிங் கேப்டனாக நீடிக்கிறார். மாற்று வீராங்கனைகளாக பிரியங்கா யாதவ், பார்வதி டாப்னோ இடம் பெற்றுள்ளனர்.

இந்திய அணி வருமாறு:

கோல் கீப்பர்கள்: நிதி, ஹர்ஷா ராணி மின்ஸ்.

பின்களம்: மனிஷா, லால்தான்லுஅலங்கி, சாக்ஷி சுக்லா, பூஜா சாஹூ, நந்தினி,

நடுகளம்: சாக்ஷி ராணா, இஷிகா, சுனெலிதா தோப்போ, ஜோதி சிங், கைடிம் ஷிலீமா சானு, பினிமா தான்

முன்களம்: சோனம், பூர்ணிமா யாதவ், கனிகா சிவாச், ஹினா பானோ, சுக்வீர் கவுர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kilpauk Garden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.